**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.80/2021**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி பி.கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு ஆகஸ்ட் மாதம் 01 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : அங்கம்மாள் | மதம் | : இந்து |
| க/பெ | : ராஜாபாதர் | ஜாதி | : -- |
| வயது | : 68 | கிராமம் | : தியாகராயநகர் |
| தொழில் : | இல்லத்தரசி | வட்டம் | : சென்னை |

**01.08.2025**
**வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு 1, 6, 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

6. எனக்கு தமிழ் எழுதப்படிக்க தெரியுமா என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் என்ன உள்ளது என்பதை என்னிடம் ஆவணங்களை காட்டி சொல்ல முடியுமா என்றால் சொல்ல முடியாது. நான் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரில் என்னை நீதிமன்றத்திற்கு செல்ல சொல்லிவிட்டார்கள் என்றால் சரிதான். பிரதிவாதிகளின் தம்பி பரந்தாமன்தான் அவரது இறுதி காலம் வரை வழக்கு சொத்தில் அனுபவத்தில் இருந்ததாக காவல் நிலைய விசாரணையில் சொல்லியுள்ளது சரியா தவறா என்றால் எனக்கு அது தெரியவில்லை. பட்டா, சிட்டா எந்த வருடம் மாற்றினேன் என்பது தெரியுமா என்றால் ஞாபகமில்லை.

7. வழக்கு சொத்து பிரதிவாதிகளுக்கு சொந்தம் என ஏற்கனவே தீர்ப்பாகியுள்ளது என்றால் நாங்கள்தான் கிரையம் வாங்கியுள்ளோம். வழக்கு சொத்து பிரதிவாதிகளுக்கு சொந்தம் என ஏற்கனவே தீர்ப்பாகியுள்ளது என்றால் எனக்கு அது தெரியாது. சொத்து எந்த வருடம் கிரையம் வாங்கினேன் என்றால் நிறைய ஆண்டுகள் ஆகிவிட்டது. 40 வருடங்கள் இருக்கும். ஞாபகமில்லை. கிரைய ஆவணத்தை பார்த்தால் என்னால் விவரம் சொல்ல முடியுமா என்றால் முடியும். கிரைய ஏற்பாடை யார் செய்தார் என்றால் நாங்கள் ஊரில் இருந்தபோது என்னிடம் ஒருவர் சொன்னார். அதன்படி நான் வாங்கினேன். என்னிடம் சொன்ன நபர் யார் என்றால் அது எனக்கு ஞாபகமில்லை.

8. நான் கிரையம் வாங்குவதற்கு முன்பு வழக்கு சொத்தை பார்வையிட்டேனா

என்றால் கிரையம் வாங்கிய பின்புதான் வந்து பார்த்தேன். எந்த சார்பதிவாளர் அலுவலகம் சென்றேன் என்றால் திருவாலங்காடு சார்பதிவாளர் அலுவலகம் சென்றேன். கிரைய ஏற்பாடை யார் செய்தார் என்றால் பல ஆண்டுகள் ஆனதால் எனக்கு ஞாபகமில்லை. அப்போது என் கணவர் இருந்தார். அவர் என்மீது ஆவணம் எழுதி வைத்தார். சார்பதிவாளர் அலுவலகத்தில் எவ்வளவு நேரம் இருந்தேன் என்றால் பல ஆண்டுகள் ஆனதால் எனக்கு ஞாபகமில்லை. வேறு எதாவது சொத்துக்கள் உள்ளதா என்றால் எனக்கு வேறு எந்த ஊரிலும் சொத்துக்கள் இல்லை. எனக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் ரொம்ப தெரியாது. கையெழுத்து மட்டும்தான் தெரியும்.

9. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் எனது கையெழுத்து எங்காவது உள்ளதா என்றால் **(சாட்சியிடம் வா.சா.ஆ 2 ஆவணம் படிக்க கொடுக்கப்பட்டது)** நான் சமீபத்தில் கண் அறுவை சிகிச்சை செய்ததால் எனக்கு சரியாக பார்வை தெரியவில்லை. அந்த ஆவணத்தில் எனது பெயர் அங்கம்மாள் என்பது மட்டும்தான் எனக்கு தெரிகிறது. வேறு ஒன்றும் தெரியவில்லை. வா.சா.ஆ 2 ஆவணத்தின் முதல் பக்கத்தில் இரண்டு கையெழுத்துக்கள் உள்ளது என்றால் இரண்டு முறை கையெழுத்துக்கள் உள்ளது. சிவாதான் சொத்தின் ஆதி உரிமையாளர் என்றால் ஆமாம். சிவா பிள்ளைகள் தான் ஜெயந்தி, ஷோபா, திலகா என்றால் ஆமாம். அவர்களை தவிர வேறு யார் யார் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் வேறு யார் மீதும் நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை. நான் வேறு யார் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல.

10. பொதுவாக சொத்தை கிரையம் வாங்குபவர்தான் முத்திரைதாள் மற்றும் பதிவு கட்டண செலவுகள் செய்வார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ 2 ஆவணத்திற்கு முத்திரை தாள் எங்கு என்ன தொகைக்கு வாங்கினேன் என்றால் சிவாவே வாங்கி வருவதாக சொல்லிவிட்டார். அவரே வாங்கி வந்து விட்டார். என்ன தொகைக்கு முத்திரைதாள் வாங்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. சிவாவே முத்திரைதாள் வாங்கிவந்தார் என்ற விவரத்தை என் வழக்கறிஞரிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தின்போது மேற்படி விவரத்தை என் வழக்கறிஞரிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் மேற்படி விவரங்கள் இல்லை என்றால் எனக்கு ஞாபகமில்லை. ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும் வரை எனது கைவசத்தில் இருந்ததா

என்றால் ஆமாம்.

11. வழக்கறிஞரை வைத்து யார் வழக்கு தாக்கல் செய்தார் என்றால் நான்தான் வழக்கறிஞரை பார்த்து வழக்கு தாக்கல் செய்தேன். எப்போதாவது முத்திரைதாள் யார் பெயரில் உள்ளது யார் யார் ஆவணத்தில் கையெழுத்து செய்துள்ளார்கள் என்ற விவரத்தை பார்த்தேனா என்றால் கிரையம் வாங்கும்போது பார்த்தேன். அதன்பின்பு பார்க்கவில்லை. கிரையம் வாங்கிய முத்திரை தாள் எனது பெயரில் இல்லாத நிலையில் கிரைய ஆவணம் சரியான ஆவணமாக இருக்காது என்றால் அந்த காலத்தில் நம்பிக்கையின் பேரில் வாங்கினோம். நான் இடையில் முத்திரைதாள் யார் பெயரில் உள்ளது என்பதை பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. நான் என்ன என்ன பரிகாரம் கோரியுள்ளேன் என்பதை சொல்ல முடியுமா என்றால் முடியாது.

12. ஆவணம் உண்மையானதா என்பதை உரிய அதிகாரியிடம் பரிசோதிக்கலாமா என்றால் எனக்கு ஆட்சேபணை இல்லை. இதே நீதிமன்றத்தில் பிரதிவாதிகள் தாக்கல் செய்த வழக்கில் வழக்கு சொத்து பிரதிவாதிகளுக்கு பாத்தியம் என தீர்ப்பு சொல்லப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ஒருவேளை பிரதிவாதிகளுக்கு தீர்ப்பாகியிருந்தால் அதில் எனக்கு ஆட்சேபணை இல்லையா என்றால் நான் கிரையம் வாங்கியுள்ளேன். இந்த வழக்கிற்கு முன்பு சொத்தில் என்ன என்ன ஆவணங்கள் ஏற்பட்டிருந்தது என்றால் எனக்கு தெரியாது. எனது வழக்கறிஞரிடம் யார் விவரம் சொன்னார் என்றால் ஊரில் உள்ள ஒரு பையன் வந்து விவரம் சொன்னார். அவர் பெயர் எனக்கு ஞாபகமில்லை.

13. எங்கள் ஊரில் உள்ள அந்த பையன் வழக்கறிஞரை எத்தனை முறை பார்த்தார் என்ன விவரம் சொன்னார் என்ன என்ன ஆவணங்களை கொடுத்தார் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் நேரடியாக தெரியாது. இந்த வழக்கு எண்ணிடப்பட்ட விவரத்தை என்னிடம் சொன்னார்களா என்றால் அந்த பையனிடம்தான் என்ன விவரம் என்று கேட்க வேண்டும். 1 முதல் 7 பிரதிவாதிகள் பெயரில் ஒரு பாகப்பிரிவினை பத்திரம் உள்ளது என்றால் தெரியாது. வா.சா.ஆ 2 போலியாக தயாரிக்கப்பட்ட ஆவணம் என்றாலும் அது எனக்கு சொத்தின் மீது எந்த உரிமையும் வழங்காது என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்தை பொருத்து 1, 6, 7 பிரதிவாதிகளுக்கு ஆதரவாக ஏற்கனவே விளம்புகை பரிகாரம் அளிக்கப்பட்டுள்ள நிலையில் நான் இந்த பிராதை விளம்புகை பரிகாரம் கேட்காமல் தாக்கல் செய்ததால்

என் வழக்கு சட்டப்படி நிலைநிற்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. வழக்கு சொத்து 1 முதல் 7 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. 1 முதல் 7 பிரதிவாதிகளுக்கு இடையே ஏற்படுத்தப்பட்ட பாகப்பிரிவினை ஆவணம் சட்டப்படி செல்லத்தக்க ஆவணம் என்றால் சரியல்ல. ஏற்கனவே 1, 6, 7 பிரதிவாதிகளுக்கு ஆதரவாக வழங்கப்பட்ட விளம்புகை பரிகாரம் சட்டப்படி சரியானது என்றால் சரியல்ல. 2014ல் வழங்கப்பட்ட விளம்புகை பரிகாரத்திற்கு 2021ல் வழக்கு தாக்கல் செய்திருப்பதால் காலவரையறையால் பாதிக்கப்பட்டதால் என் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)